JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 187/2015 Date: 20.04.2021 P.W. 1

பெயர் ° கலாவதி
தந்தை பெயர், க/பெ ° துலுக்காணம்
முகவரி °
கிராமம் °
மாவட்டம் °
ஜாதி °
தொழில் °
மதம் °
வயது °

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 20th day of April 2021

**முதல் விசாரணை** - நான் தற்போது எண் 257 கே எச் ரோடு, அயனாவரம் குடியிருந்து வருகிறேன். 2013 வருடம் 6ம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. காலை சுமார் 10.00 மணியளவில் நான் அயனாவரத்திலிருந்து கோல்டன் காலனிக்கு செல்வதற்கு பேருந்திலிருந்து இறங்கி சென்றபோது இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்து நான் அணிந்திருந்த சுமார் 3 பவன் தங்க செயினை அறுத்து சென்றுவிட்டனர். பிறகு போலிசார் கூறியதன் பேரில் நீதிமன்றத்தில் மனு செய்து சுமார் 1 1/2 பவன் தங்க செயினை பெற்று சென்றேன். தற்போது இது மட்டும் தான் கிடைக்கப்பெற்றது என்று போலிசார் கூறினார்கள். ( 1 , 2 எதிரிகள் ஆஜரில் இல்லாமல் பிரிவு 317 கு வி மு சவின் கீழ் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு எதிரிகளின் அடையாளம் குறித்து மறுப்பு இல்லை என்று மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன) நான் பெற்று சென்ற நகை வீட்டில் வைத்துள்ளேன். தற்போது நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை. இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன். அந்த புகார் அதசாஆ.1. போலிசார் விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனக்கு எழுத படிக்க தெரியாது. புகார் யார் எழுதியது என்றால் என் மகன் வந்து எழுதி கொடுத்தார். புகார் தேதியிடபடவில்லை என்றால் சரிதான். போலிசார் சொல்ல சொல்ல என் மகன் புகார் எழுதினார் என்றால் சரிதான். புகாரில் எதிரிகளின் அங்க அடையாளம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காணாமல் போன நகைக்கான ரசீதை விசாரணையில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். நான் நீதிமன்றம் மூலம் பெற்று சென்றது காணாமல் போன என் நகை அல்ல என்றாலும் அதற்கு பதிலாக கொடுக்கப்பட்ட வேறு நகை என்றாலும் சரிதான். நகை பறித்தவர்களை சம்பவத்தின் அன்றே போலிசார் என்னிடம் அடையாளம் காட்டினார்கள் என்றால் சரிதான்.அதசாஆ.1 புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரிமா என்றால் தெரியாது. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் பொய் புகார் அளித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,Ambattur.